**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நான்காண்டு நல்லாட்சியில் தியாகிகள், தேசத்தலைவர்கள், தமிழ் மண்ணுக்கு பெருமை சேர்த்தப் பெரியோர்களின் புகழுக்கு மணிமகுடம் சூட்டும் வகையில் புதிய மணிமண்டபங்கள், நினைவகங்கள், கலையரங்கங்கள், திருவுருவச்சிலைகள் மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 94.07 கோடி நிதி ஒதுக்கீடு**

----

**செய்தி மக்கள் தொடர் அலுவலர்களின் இரண்டு நாட்கள் நடைபெறும் பணி ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே. டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் பேச்சு**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நான்காண்டு நல்லாட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையில், தியாகிகள், தேசத்தலைவர்கள், தமிழ் மண்ணுக்கு பெருமை சேர்த்தப் பெரியோர்களின் புகழுக்கு மணிமகுடம் சூட்டும் வகையில் ரூபாய் 94.07 கோடி மதிப்பீட்டில் புதிய மணிமண்டபங்கள், நினைவகங்கள், கலையரங்கங்கள், திருவுருவச்சிலைகள், மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் பேசினார்கள்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இரண்டு நாட்கள் (18.08.2015 மற்றும் 19.08.2015) நடைபெறுகிறது. இன்று (18.08.2015) காலை சென்னை தரமணியிலுள்ள எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன கூட்ட அரங்கில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தை மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தொடங்கி வைத்து பேசும்போது கூறியதாவது:

“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ‘எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’ என்பதன் அடிப்படையில் எண்ணற்ற திட்டங்களை உருவாக்கி, நிறைவேற்றித் தந்துள்ளார்கள். இத்திட்டப் பயன்கள் மக்களுக்கு முழுமையாகச் சென்றடைகின்ற வகையில் செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் விளம்பரப் பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு, அரசின் திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் அறிந்து பயன்பெறச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். அரசின் திட்டங்களை, சாதனைகளை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் ஆர்வமாகவும், விரைவாகவும் பணியாற்றிட வேண்டும். அரசிற்கும், மக்களுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து, செயலாற்றிட வேண்டும்.

இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு நிகழ்த்தியுள்ளது. திட்டங்களைத் தேடி மக்கள் சென்றகாலம் மாறி, மக்களைத் தேடித் திட்டங்கள் செல்வது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான்.

செய்தி மக்கள்தொடர்பு அலுவலர்கள் செய்தியாளர்களுடனும், செய்தி நிறுவனங்களுடனும் நல்லுறவை வளர்த்து, தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வரவேண்டும்.

கடந்த நான்காண்டுகளில் அரசு, அனைத்துத் துறைகளிலும் வியக்கத்தகு சாதனைகளைப் படைத்துள்ளது. இச்சாதனைகளையெல்லாம் உரிய முறையில் விளம்பரப்படுத்திட வேண்டும். சாதனை விளக்கக் கையேடுகள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் வாயிலாகவும் விளம்பரப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிப் பகுதிகளில் அரசின் சாதனை விளக்க வீடியோப் படக்காட்சிகளை தவறாமல் நடத்திட வேண்டும். அரசின்

செய்திப் படங்கள் திரையரங்குகளில் தொடர்ந்து காண்பிக்கப்பட்டுவருகிறதா என ஆய்வு செய்ய வேண்டும்.

மாவட்டங்களில் அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சிகளை அதிக அளவில் நடத்திட வேண்டும்.

தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில்தான் செய்தி மக்கள் தொடர்புத் துறை நவீனப்படுத்தப்பட்டுள்ளது. தேவையான அனைத்து வசதிகளும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது, புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கேற்ற வகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்தி வெளியீடுகளை தாமதமின்றி, விரைவாக நாளிதழ்களுக்கு வழங்கி, செய்திகள் வெளிவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தலைமையிடத்திற்கு அனுப்பவேண்டிய விவரங்களை, எவ்வித காலதாமதத்திற்கும் இடமளிக்காமல் விரைவாக அனுப்பி வைக்கவேண்டும்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் தங்கள் பணிகளை நல்லமுறையில் ஆற்றி வருகிறார்கள். இன்னும் சிறப்பாக தங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசின் திட்டங்களை, சாதனைகளை வெற்றிக் கதைகளாக எழுதி, பயனாளிகளின் பேட்டியுடன் வெற்றிக் கதைகள் நாளிதழ்களில் வெளிவர ஆர்வத்துடன் பணி மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தாம் ஆட்சிக்கு வரும் காலங்களில் எல்லாம், தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்த பெரியோர்களையும், தமிழ் மாநிலம் மேன்மையுறப் பாடுபட்ட தலைவர்களையும் நினைவுகூர்ந்து, அவர்களது புகழ் என்றென்றும் நிலைக்கும்

வகையில் அவர்களைப் பெருமைப்படுத்துவதை தன்னுடைய தலையாயக் கடமையாகக் கொண்டு செயலாற்றி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011–ஆம் ஆண்டு முதல் 2015–ஆம் ஆண்டுவரை, கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் புதிய மணிமண்டபங்கள் அமைத்திடவும், திருவுருவச்சிலைகள் நிறுவிடவும், கலையரங்கம் கட்டிடம், மணிமண்டபங்கள், நினைவகங்கள் மற்றும் திருவுருவச்சிலை புனரமைப்புப் பணிகளுக்காகவும் இதுவரை எந்த அரசும் செய்யாதச் சாதனையாக ரூபாய் 94.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, சாதனை படைத்துள்ளார்கள்.

அரசின் திட்டங்கள், சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் அரசு இதழான "தமிழரசு" இதழ் திங்கள்தோறும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு வருகிறது.

தமிழரசு இதழ் சொந்த கட்டடத்தில் இயங்குவதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 6.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது தரமணியில் தமிழரசு இதழுக்கான புதிய கட்டடம் கட்டும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டில் ரூபாய் 30 லட்சம் தளவாடச் சாமான்கள் வாங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு வெளியிடான தமிழரசு இதழை பல வண்ணத்தில் அச்சிட்டு வெளியிடுவதற்கு ஏதுவாக நவீன தொழில் நுட்ப வசதியுடன் கூடிய அச்சு இயந்திரங்கள் வாங்க ரூபாய் 4 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இயந்திரங்கள் வாங்கப்பட்டு, தற்போது கருவிகளை பொருத்தும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

மேலும், தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர், தூத்துக்குடி, நாகர்கோவில், வேலூர்,

திருண்ணாமலை ஆகிய 10 மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் மட்டும் இதுவரை 34 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, ரூபாய் 11.71 கோடி அரசிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இப்பொருட்காட்சிகளை 69,06,822 பேர் பார்வையிட்டு, பயனடைந்துள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை அனைத்து மாவட்டங்களிலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு, நடத்தப்பட்டது. இக்கண்காட்சியை 4 லட்சத்து 17 ஆயிரத்து 100 பேர் பார்வையிட்டுள்ளனர்.

இதயதெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் சாதனைகள், கடைக்கோடி மக்களுக்கும் சென்றடையச் செய்கின்ற வகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி சிறப்பாக இருக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்பு அவலர்கள் தங்கள் திறமைகளை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு, சிறப்பாக பணியாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் பேசினார்கள்.

இப்பணி ஆய்வுக் கூட்டத்தில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பல்வேறு பணிகள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வை மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்து பேசினார்கள். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள், கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. எஸ்.பி. எழிலழகன் அவர்கள் நன்றி கூறினார்கள். கூட்டத்தில் இணை இயக்குநர்கள் திரு. கு. தாணப்பா, , திரு. உல. ரவீந்திரன், திரு. சிவ. சு. சரவணன்,

துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், பிரிவு அலுவலர்கள், பிற அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**